

உ

ஸ்ரீ காமாட்சியம்மன் றுணை :

ஓமாந்தூர்

# காமாட்சியம்மன் பதிகம்

இஃது

திரிசிரபுரம் இலக்கண உபாத்தியாயர் கனம்
பிச்சை இபுறுகீம் புலவரவர்கள் மாணாக்கரு
ளொருவரும் முனியப்பசெட்டியார்
குமாரருமாகிய
சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களாலியற்றி

நடராஜா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது
1920.



உ

சிவமயம்.

# சாத்துக்கவிகள்.

திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டார் கூறிய சாத்துக்கவி.

வெண்பா.

ஓமபுரி வாழு முமையின் திருவடிக்கு
நாமமுறு செந்தமிழி னற்பதிகம்-ஏமமுறச்
சூட்டினு னன்மதிசேர் சுப்பிர மண்யனனி
ஈட்டினு னின்பமெலா மே.

சோழமாதேவி இலக்கண உபாத்தியார் மகா-ள-ள-ஸ்ரீ கனம் வித்துவான் குப்புசாமி பிள்ளை அவர்களால் இயற்றியது.

வெண்பா.

பூமேவு மோமா புரிவளர்கா மாட்சியின் மேற்
பாமேவு நற்பதிகம் பாடினுன்-றாமேவும்
பைந்தமிழ்தேர் சுப்ரமண்யப் பாவல னுள்ளமு
வந்துலகம் போற்ற வினைந்து.

மதுரைத் தமிழ்ச்சங்கம் சேது சமஸ்தானம் ஆண்டி
பட்டி சமஸ்தானம் பசும்பொன் முதலிய விடங்களில்
தங்கமெடல் பரிசுபெற்ற மகா-௱-௱-ஸ்ரீ

ஸ்ரீ. வி. திருஞான சம்பந்தக் கவிராயர் அவர்களால்
இயற்றியது.

கட்டளைக்கலித்துறை.

பூமேவு மோமா புரிவாழ்கா மாக்ஷியின் பொற்பதத்தே
நேமேவு நேம முடனே பதிக நெகிழ்ந்து சொற்றான்
தேமேவு செந்தமி ழின்சொல் விளங்கச் சிறந்தவியற்
பாமேவு சுப்ரமண் யக்கவிச் சிங்கமிப் பார்க்கினிதே

உ

ஸ்ரீ காமாட்சியம்மன் றுணை:

ஒமாந்தூர்

# காமாட்சியம்மன் பதிகம்.

## விநாயகர்துதி.

சீராரு மோமபரிச் செல்வக்காமா ட்சியின் மேல்
பேராரு நற்பதிகம் பேசுவதற்-கோராருங்
கங்கைதங்குஞ் செஞ்சடையன் சங்கையன்சு தன்கரிமு
கங்கொளைய னம்புயத்தாள் காப்பு.

## பதிகம் நூல்.

### இரட்டையாசிரிய விருத்தம்.

திருமருவு கதிர்மதியின் வதனமுங் காரெனத்
திகழ்தருங் கூந்தலழகுஞ்
செழும்பவள வதரமுந் தரளமும் பணிசெயச்
சேர்ந்தபல் லொளியுமின்னத்
தருமருவு கரமதனி லிரவியன வளையலூர்
தங்கநிறமான வுடையுந்
தவவலவ ரிரவுபக லோயாது பணிசெயுந்
தாளினணி பொற்சிலம்பும்
பருவநல மோடிவ் வனப்பெலாங் கொண்டுநற்
பாண்டிய குமாரியான

பரிசெனத் தோன்றியென் முன்வந்து வேண்டுமிக
 பரபோகமதனை யருள்வாய்
கருமருவு பிணியகலு மோமபுரி தன்னில் வளர்
 கம்பைமாநதி யன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
 காமாட்சியம்மை யுமையே. 1

சுந்தரச் சுட்டியுங் காதினிற் கம்மலுந்
 தொங்கலிடு முத்தாரமுந்
துய்யநவ மணியிழைத் தேயொளிர் பதக்கமுஞ்
 சொர்னத் திருக்கச்சையுங்
கந்தரந்தன்னிலணி சந்தரவட முந்திருக்
 கனகவளை புனையுங்கரக்
கஞ்சமலர் தன்னிலே கொஞ்சிடுங் கிளியுங்
 கவின்பெறப் புனையுமரசே
மந்தரந்தன்னிலுறை மங்கையுஞ் செங்கமல
 மங்கையுங் கலைமங்கையு
மலர்சொரிந் தேத்திப் பணிந்திடுந் திவ்வியகுண
 மலைவல்லி யேவிளங்குங்
கந்தமிகு சோலைசூ ழோமபுரி தன்னில்வாழ்
 கம்பைமா நதியன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
 காமாட்சி யம்மை யுமையே 2

பண்ணவர்கள் போற்றும் பரத்துவப் பேறே
பசும்பொனே மாணிக்கமே
பங்கமில் லாக்கல்வி வங்கமே துங்கமே
பவளவா யமுதமயமே
விண்ணவரு மண்ணவரு மெண்ணவரு பொருடனை
விருப்புட னளிக்குமரசே
வேதாந்த சித்தாந்த மென்னுமிரு மனையமர்
விளக்கே விளக்குமொளியே
புண்படார்ந் திலகுநெஞ் சத்தரா யேற்குநின்
புகழருளை யினிதளிப்பாய்
புண்யகா ருண்யலா வண்யசுப் பிரமண்ய
புதல்வனைப் பெற்றதாயே
கண்கவர் வனப்புவா யோமபுரி தன்னில்வளர்
கம்பைமா நதியன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
காமாட்சியம்மை யுமையே 3

நெஞ்சமதி னின்சரண கஞ்சமதை யெண்ணாது
நிலைகுலைந் தேயலைந்து
நித்தமும் பொய்சூது வஞ்சமுங் குடிகொண்டு
நீலவிழிமட மாதரைத்
தஞ்சமென் றெண்ணி யவ ருக்குழைத்தேனன்றி
சர்வசம யாதீதமே

தத்துவ சொரூபியே வித்தக வுருபியே
சகலஜீ வாதாரியே
செஞ்சொலங் கணிகொண்ட சுனியே கண் மணியே
திருத்தகுநல் விரு நிதிபமே
தேவியே யென்றுனைப் போற்றினே னின்னருட்
டிரவியந் தனையீகுவாய்
கஞ்சமார் பண்ணைசூ ழோமபுரி தன்னில் வளர்
கம்பைமா நதியன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
காமாட்சியம்மை யுமையே 4

ஆணிலே பெண்ணிலே யென்போலு மொருபேதை
யகிலத்திலரி தரிதுகா
ணம்மையே யிம்மையி னன்மையே மறுமையி
னருமையே யமலவடிவே
வீணிலே திரியுமன மெட்டாத தெய்வமே
விண்ணவர்க டண்ணமிர்தமே
வேதவே தாந்தமே நாத நாதாந்தமே
விளங்கிடுஞ் சோதியொளிவே
பூணிற்பொலிந்தமுலை யமுதுண்ட பிள்ளையும்
புனிதகவி பாடவிலையோ
புகலுமது போலவே நின்னருட் குழவியும்
புனிதகவி பாடவருள்வாய்

காணரிய பேரின்ப முத்திதரு மோமபுரி
கம்பைமாநதி யன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
காமாட்சியும்மை யுமையே 5

அற்புதத் தேனே நல் லருள்பழுத் தவர்மனத்
தன்பொடு கனிந்த கனியே
யமுதசஞ்சீவியே கன்னல் ரசமேயென்
னருந்தனி யுயிர்க்குமுயிரே
சிற்பரைப் பெருவெளமுக் கட்சுடர்க் கொருதுணைச்
செல்வமே செல்வமெல்லாந்
தேடாது கோடான கோடியா யீந்திடுந்
தெய்வதருவே யின்பமே
பற்பலவ ளைக்கைக் கிளிக்குஞ் சலாபினது
பனிவிழிக்கும் வந்தனம்
பாதக மகற்றுமுன் சேவடிம லர்க்குமொரு
பதினுயிரங் கும்பிடு
கற்புநிறை மாதர்வா ழோமபுரி தன்னில் வளர்
கம்பைமாநதி யன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
காமாட்சியம்மை யுமையே 6

இருப்புநெஞ் சகமுடைய நாயினே னுயினே
னிடையறாதுருகி நாடி

யெந்தநா ளுன்றனுண் மலரடியை யணுகுநா
ளெனவெனவு மேத்தி யேத்தி
நெருப்பிலே யிட்ட மெழுகது போல மனமிளகி
நெக்கு நெக் குருகி மேலு
நேசமுற் றிருவினைப் பாசமற்றெனதுயா
னெனு நினைவு மற்றுநாளும்
விருப்பமா யுனையுள்க வருள்புரிவை பரமசுக
வித்தக சொரூப வொளிவே
விண்மணி பெண்மணி யம்மணி கண்மணி
வேதியர்கள் பரவுமணியே
கருப்பமார் நந்துலவு கழனிசூ ழேரமபுரி
கம்பைமா நதி யன்னமே
கமலதள நயனமதி லதிக்கருணை நிதியுதவு
காமாட்சியம்மை யுமையே. 7

மண்டலந் தன்னிலே கண்கண்ட தெய்வ நீ
வாலையம் பிகையு நீயே
வன்மை தரு மணிமந்தர சிவகாம சுந்தரி
மனோன்மணியு மானவளுநீ
கண்டுலவு மமலை நீ காளி நீ சூலி நீ
கரகபா லியளுநீயே
காணு மோங் காரி நீ கவுரிவல் லபையுநீ
சாயாம்பூ மேனி யளுநீ

வண்டுலவு மாலை புனை பெரியண்ண சுவாமியை
மணிவாயில் கொண்டவளு நீ
மாதங்கி சாமுண்டி சத்திமகி டாசுர வர்தனியு
மாகு நீயே
கண்டிடவு ரோமரிஷி நிட்டை கூடோமபுரி
கம்பைமா நதி யன்னமே
கமலதள நயனமதி லதிகருணை சிறியுதவு
காமாட்சியம்மையுமையே.

அந்தமுறு சண்பகம் பாதிரி மாதவீ
யணிமலர்ச் சோலைநோக்கி
யானிரைப் பின்றொடர்ந் தம்மையப் பாவென்
றழைத்திடக் காராளனுஞ்
சிந்தைமகி ழொடுவந்து பிரணவ சொரூபமாய்ச்
சினகரந் தமையமைத்துச்
சிங்கார சங்கார வோங்கார ரீங்கார
செல்வியே யெனவணங்கச்
சந்ததமு மக்குடித் தலைவருனை நாடோறுந்
தங்கள்குல தெய்வமென்றே
தாளிணையை மறவாம லேதுதிப்பாருன்
றனிப்பெருமை யென்புகலுவேன்
கந்தமா ரோமதீர்த் தப்பெருமை வாய்ந்திடுங்
கம்பைமா நதியன்னமே

கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
காமாட்சியம்மை யுமையே 9

வித்தையா திற்றெனத் தெளிகிலாச் சிறியேன்
விளம்புமிப் புன்சொலை யெலாம்
வீணென் றகற் றிடாதுன்செவி யி லேற்றருள்செய்
வெற்பரைய னற்புதல்வியே
பெற்றதா யென்றுனைப் போற்றினேன் மறவாது
பிள்ளையின்கலி நீக்குவாய்
பேதையே னுற்றதுயர் போதுமினி யென்னுற்
பொறுக்கமுடி யாதுகண்டாய்
நத்தினஞ் சூழ்ந்தீன்ற முத்தினந் தன்னையே
நாரைதன் னண்டமென்றே
நாடோறு மடைகிடக் கும்பண்ணை சூழ்ந்திலகு
நன்னீர் வளம்பொலிந்தே
கற்றையார் சோலைசூ ழோமபுரி தன்னில்வளர்
கம்பைமா நதி யன்னமே
கமலதள நயனமதி லதிகருணை நிதியுதவு
காமாட்சியம்மை யுமையே 10

— முற்றிற்று —